பகுதியிலும் விவசாயிகளிடம், பசு மாடுகளும், எருமை மாடுகளும் நிறைய இருக்கின்றன. இந்த இடத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு-2000-2001 ஆண்டுக்கு புதிய கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் தொடங்குவதற்கு அரசால் நிதி ஒதுக்கப்படவில்லை. எனினும், திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல சிவகிரி என்ற ஊரில் கால்நடை மருத்துவமனையும், சிந்தாமணி என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும் மற்றும் வாசுதேவநல்லூர், நெற்கட்டும்செவல், முள்ளிக்குளம், விஸ்வநாதபேரி, இராயகிரி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், ஆத்துவழி, பாறைப்பட்டி, வடமாபுரம், தேவிப்பட்டினம், திருமலாபுரம் ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற தென்மலை கிராமத்தில் 25-7-2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் நடைபெற்று, அங்கே 2,352 கால்நடைகளுக்குச் சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் அரசின் நிதிநிலைமை மற்றும் அந்த ஊரிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கால்நடை மருத்துவமனை தொடங்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

40—

நல வாரியம்

***10907—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

தமிழகத்தில் பழங்குடியினத்தவர்களுக்கென தனியாக நல வாரியம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசால் ஆய்வு செய்யப்படவில்லை.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்கள் பல்வேறு வகையிலே பாதிக்கப்படுகிறார்கள். மலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்குக் கல்வி, இருப்பிட வசதி, உணவு மற்றும் பல்வேறு வசதிகள் கிடைக்காத ஒரு அவல நிலை தொடர்ந்து நடைபெறுகிறது. இவர்களுக்குத் தனியாக இயக்குநரகம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, ஒரு இயக்குநரே இவர்களுக்காக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு தீர்வு கண்டுவிட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களை அந்த மோசமான நிலையிலிருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுத்து, அவர்களுக்குத் தேவையான வசதியை செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு என்று ஒரு தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசு ஆழ்ந்த சிந்தனையுடன் பரிசீலித்து பழங்குடி இனத்தவர்களுக்கு உரிய தனி நல வாரியம் அமைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டையகுடி, பழங்குடி, அதுவே பாரில் சிறந்த குடி என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளையும் புரிந்திருக்கிறது. அந்தப் பழங்குடி மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு, மலை அளவுக்குச் செய்ய வேண்டுமென்று பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. தேவையின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டுவது மட்டுமல்ல, செயல்படுத்துவது, தடைப்படா முன்னேற்றம் காண்பது, அந்தப் பகுதி மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக தனி இயக்குநரகம் அமைத்து ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலரையும் நியமித்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. பழங்குடியினர் நலம்காக்க சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி அலுவலர் சிறப்பாகப்

2001 ஜனவரி 23]

பணியாற்றி வருகிறார். ஆகவே ஒரு இயக்குநரகம் இருக்கின்ற நேரத்திலே அதற்காகத் தனியாக வாரியம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2)*
(முதல் பட்டியல்)

1—

தேர்ச்சி

வினா 18449—திரு. ஐ. கணேசன்: *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இந்திய ஆட்சிப்பணி (ஐ.ஏ.எஸ்.), இந்திய காவல் பணித் (ஐ.பி.எஸ்.) தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் தேர்ச்சி பெற தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

(ஆ) சேலத்தில் இப்பணித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி மையம் ஒன்று அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து அவர்களை அகில இந்திய ஆட்சிப்பணி மற்றும் மத்தியப் பணிகளில் அமர்த்த அரசு ஆணை எண் 2315, உள்துறை, நாள் 14-7-1966-ல் ஒரு பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. அதே போல பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் பயிற்சி அளிக்க அரசு ஆணை எண் 730, சமூக நலத்துறை, நாள் 21-6-1971-ல் ஒரு பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையங்கள் தனித்தனியே இயங்கி வந்தன. இவ்விரு நிலையங்களிலிருந்து முறையே 103 தனிப்பயிற்சி நிலையம் (பி.வ) மூலமும், 80 பேர் முன் தேர்வு பயிற்சி மையம் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) மூலமும் பயிற்சி பெற்றவர்கள் அகில இந்திய ஆட்சிப்பணி மற்றும் மத்திய பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் தமிழகத்திலிருந்து அதிகமாக இந்திய ஆட்சிப் பணிகளில் தேர்ச்சிப் பெறவும், இந்நிலையங்களின் தரத்தை மேம்படுத்தி வசதிகளைப்

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.